Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124/2023** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | திரு. முருகன் |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

எதிரிகள்2,3 ஆஜர். எதிரி-1 இறப்பு.

**முதல் விசாரணை** :

நான் திண்டுக்கல், கக்கன் நகரில் குடியிருந்து வருகிறேன். நான் பாத்திர வியாபரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். வழக்கில் இறந்து போன தோன்மொழி என்ற மகாலெட்சுமி எனது பேத்தி. 1வது எதிரிக்கும் எனது பேத்திக்கும் 2019 ல் திருமணம் நடந்தது. 13 பவுன் நகை, நட்டு, பண்ட பாத்திரம் சீர் கொடுத்து, திருமணம் செய்து வைத்தோம். அந்த நகைகளை மகாலெட்சுமியின் மாமனார் அடகு வைத்துவிட்டார். அது பற்றி என் பேத்தி மகாலெட்சுமி என்னிடம் சொன்னார். என் பேத்தி அடிக்கடி திண்டுக்கல்லுக்கு வந்து, எதிரிகள் நகையை வாங்கிக் கொடு, நட்டு வாங்கிக் கொடு, என அடித்து

துன்புறுத்தினார்கள் என்றும் 1வது எதிரிக்கு டாடா ஏஸ் வண்டி, பைக் வாங்கிக் கொடு என்று எனது பேத்தியின் வீட்டுக்காரர் ராஜா என்பவர் கேட்டதாக, என் பேத்தி மகாலெட்சுமி என்னிடம் சொன்னார். என் பேத்தி, எதிரிகளும் அவரது கணவரும் டார்ச்சர் செய்ததாகச் சொன்னார். 2021ம் வருடம், எனது அண்ணன் மகன் மாரிமுத்துவிற்கு, இரவு 08.30 மணிக்கு போன் வந்ததாகவும், பிள்ளையைக் கட்டிக் கொடுத்த இடத்தில் பிரச்சனையாக உள்ளது வாப்பா என்று எனக்கு போன் செய்து கூப்பிட்டார். நான் வெளியூரில் இருந்ததால், நீ முன்னால் போய் பார், நான் பின்னால் வருகிறேன் என்று சொன்னேன். பிறகு, சிறிது நேரம் கழித்து, மகாலெட்சுமி சீமைத்தண்ணீரை ஊற்றி செத்துப் போய்விட்டதாக மாரிமுத்து எனக்கு போனில் தகவல் சொன்னார். நான் மதுரை GH வந்து பார்த்தேன். மகாலெட்சுமி இறந்திருந்தார். இந்த வழக்கு சம்பந்தமாக மாரிமுத்துவும், அமுதாவும் புகார் கொடுத்தார்கள். நானும் காவல்நிலையம் போயிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

எனக்கு எந்த விஷயமும் நேரடியாகத் தெரியாது. போன் மூலமாகத்தான் தெரியும். 2,3 தடவை போலிஸ் ஸ்டேசனுக்குப் போயிருக்கிறேன். போலிசார் விசாரணையின் போது, நகை நட்டு எதிரிகள் கேட்டதாகச் சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன். நகை நட்டை, மகாலெட்சுமியின் கணவர் ராஜா அடகு

வைத்ததாக கூறியுள்ள விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன். பைக், டாடா ஏஸ் கேட்டார்கள் என போலிஸ் விசாரணையில் சொன்னேனா



என்று கேட்டால் சொன்னேன். கொஞ்ச நாள் பொறு, நான் வாங்கித் தருகிறேன் என்று சொன்ன விபரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்று கேட்டால் சொன்னேன். நான் முதுல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை போலிஸ் விசாரணையில் கூறியிருக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. இறந்துபோன நபர் எனது உறவினர் என்பதால் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ),
மகளிர் நீதிமன்றம், மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

## IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 124 / 2023** |
| **Deposition of witness for** | : | **PW : 4** |
| **Name** | : | திருமதி. தீபிகா |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

எதிரிகள் 2,3 ஆஜர். எதிரி-1 இறப்பு.

**முதல் விசாரணை :**

நான் திண்டுக்கல், கக்கன் நகரில், கதவு எண்.11/19C ல் குடியிருந்து வருகிறேன். இறந்து போன மகாலெட்சுமி எனது அக்கா. 13.03.2019 ம் தேதி என் அக்காவை ஆஜர் எதிரிகளுடைய மகன் ராஜா என்பவருக்குத் திருமணம் செய்து கொடுத்தோம். மேற்படி ராஜா சுமார் ஒரு வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார். எனது அக்கா வீட்டிற்கு வரும் போது, என் அம்மாவிடம், அவரது மாமியார் வரதட்சனை கேட்டு தினமும் கொடுமைப்படுத்தியதாகவும் அவரது கணவர் தினமும் குடித்துவிட்டு வந்து கொடுமைப்படுத்துவதாகவும்,

அவரது கணவர் நகை பத்தவில்லை, பணம் பத்தவில்லை என்று சொன்னதாகவும்,



மாமியார் சொல்லிக் கொடுத்ததை அவரது கணவர் கேட்டு வந்ததாகவும் என் அக்கா சொன்னார். என் அக்காவின் கணவர் தினமும் அவரை அடித்துக் கொடுமைப்படுத்துவதாகவும், என்ன செய்தாலும் அவரது மாமியார் குறை சொல்லி திட்டி வந்ததாகவும், என் அக்கா என் அம்மாவிடம் சொல்லி வந்தார். 13.07.2021ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில், என் அக்கா, என் அப்பாவிற்குப் போன் போட்டு, மாமியார் திட்டுவதாகவும், அடிப்பதாகவும் கணவர் குடீத்துவிட்டு வந்து கொடுமைப் படுத்துவதாகவும், நகை பத்தவில்லை இன்னும் கேளு என்று சொன்னதாக என் அப்பாவிடம் சொன்னார். நான் என் அப்பா பக்கத்தில் இருந்து கேட்டேன். போனை என் அக்கா வைத்துவிட்டார். 10 நிமிடம் கழித்து, எதிரி பஞ்சவர்ணம் போன் செய்து, உங்க பிள்ளை மண்ணெண்ணையை ஊற்றி கொழுத்திக்கிடுச்சு என்று சொன்னார். என் அப்பா, அம்மா அவசரமாகக் கிளம்பி சொந்தக்காரங்களைக் கூட்டிக் கொண்டு மதுரை GH க்கு போனார். என் அப்பா, என் அக்காவின் மாமியாருக்கு போன் போட்டார். switchoff என்று வந்தது. என் பெற்றோர்கள் இது சம்பந்தமாக புகார் கொடுக்கப் போனார்கள்.

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

என் அக்கா என் அப்பாவிடம் போனில் பேசியதாக நான் சொன்ன சங்கதிகளை நான் என் அப்பாவுடன்இருந்து கேட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொன்னேனா



என்று தெரியவில்லை. நான் என் அக்கா இறந்த வீட்டிற்குப் போகவில்லை. மார்ச்சுவரிக்குப் போனேனா என்று கேட்டால் மறுநாள் போனேன். என் அக்கா இறப்பதற்கு முன், எதிரிகள் வரதட்சணை கேட்டதாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. என் அக்கா இறந்துவிட்டதால், எதிரிகளுக்கு எதிராக கோவத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி (மு.கூ.பொ.),
மகளிர் நீதிமன்றம், மதுரை.